**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 256 of 2025 |

Depositions of PW -3 witness for ________ { Prosecution / Defence / Court

Name : செல்வராஜ்

Father's Name : பழனி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of February** 2026.

**(1-3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் நடுத்தோட்டம் காடுவெட்டி பாளையத்தில் குடியிருந்து கொண்டு தறி ஓட்டும் வேலை பார்த்து வருகிறேன். எதிரிகள் 3 பேரையும் எனக்கு தெரியும். கருப்பசாமி அவர்களை தெரியும். அவரிடம் தான் நான் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 28.05.2020 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் நாம் தறிகுடோனில் வேலை செய்து கொண்டிருந்த பொழுது சத்தம் கேட்டு நான் சென்று பார்க்க எதிரிகள் மூன்று பேரும் பாக்கியலட்சுமியை பார்த்து திட்டிக் கொண்டிருந்தார்கள். கண்டாரோலி, தேவடியா என அசிங்கமாக திட்டினார்கள். நான் சிறிது நேரம் நின்று அங்கிருந்து வந்துவிட்டேன். பாக்கியலட்சுமி அழுது கொண்டே வந்தார். நான் தறிகுடோனுக்குள் சென்று விட்டேன். இரண்டாம் எதிரி ரங்கசாமி களைக்கொல்லி மருந்தை அடித்ததால் பிரச்சனை ஏற்பட்டது என தெரிந்து கொண்டேன். களைக்கொல்லி மருந்து அடித்ததில் பாக்கியலட்சுமி தோட்டத்தில் இருந்த எலுமிச்சை, தென்னம்பிள்ளை வறண்டு விட்டது. இரண்டு நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>ஒன்று முதல் மூன்று எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தற்பொழுது வரை வேறு எந்த வழக்கிலும் சாட்சியம் அளித்தது கிடையாது. தரிகுடோனுக்கும் எதிரிகள் மருந்து அடித்துக் கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 20 அடி இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பொழுது தறிகுடோனில் தறி ஓடிக் கொண்டிருந்தது என்றால் சரிதான். தறி குடோனில் தறி ஓடினால் வெளியே நடக்கும் சத்தம் கேட்காது என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டு வெளியே சென்றதாக சொல்வது போய் என்றால் சரியல்ல. அப்பொழுது நான் வெளியே பீஸ் மடித்துக் கொண்டிருந்தேன். அன்றைய தினமே போலீசார் வந்தார்கள் என்றால் சரியல்ல. போலீசார் இரண்டு நாட்கள் கழித்து தான் வந்தார்கள்.

2. போலீசார் வந்த பொழுது யார் யார் இருந்தார்கள் என்றால் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். கருப்பசாமி இருந்தார், பாக்கியலட்சுமி இருந்தார்கள், பிரபாகரன் என்பவரும் இருந்தார். நான் பீஸ் மடித்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து எதிரி மருந்து அடித்ததாக சொல்லப்படும் இடம் தெரியுமா என்றால் தெரியும். நான் மேற்சொன்ன நபர்கள் தவிர்த்து வேறு யாரும் சம்பவ இடத்தில் இல்லை என்றால் முருகேசன், சலூன் கார்த்தி இருவரும் இருந்தார்கள். நான் போலீசார் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் தற்பொழுது முதல் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். முருகேசன் எதற்காக அன்றைய தினம் அங்கு வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் பாக்கியலட்சுமி போன் மூலம் தகவல் சொல்லி வரச் சொன்னார், ஆகவே வந்தார். சம்பவ தினத்தன்றும் முருகேசன் பாக்கியலட்சுமி சொல்லி வந்தார்.

3. முருகேஷ் கருப்பசாமியின் உறவினர் என்றால் சரிதான். இரண்டாம் எதிரி ரங்கசாமி அவர்களை நான் சம்பவத்திற்கு முன்பாக பார்த்து உள்ளேன். கருப்பசாமி குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் பாதை சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் கருப்பசாமி உடன் வேலை செய்து வருவதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.06 15:03:08 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**